RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 193 | ஜூலை.19 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட உறுதியேற்போம்” : முதல்வர் விஜய்

சென்னை: ஜூலை.19-

தமிழ்நாடு நாளை ஒட்டி “சங்கம் கண்ட செம்மொழியின் தாயகமாக, சமத்துவமும், சமூகநீதியும் தழைத்தோங்கி, கல்வியிலும், தொழில்நுட்பத்திலும், திறன்மிகு மனிதவளத்திலும் சிறந்தோங்கும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட இந்நாளில் உறுதியேற்போம்” என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “தமிழரின் தொன்மை, வரலாறு, பண்பாடு, மொழியுணர்வைப் போற்றும் வகையில் நமது மாநிலத்திற்கு ‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இந்நாளில், தமிழ் மக்கள் அனைவருக்கும்



மனமார்ந்த ‘தமிழ்நாடு நாள்’ நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மெட்ராஸ் மாநிலமாக உருவான நவம்பர் 1ஆம் நாளையும், ‘தமிழ்நாடு’ எனும் பெயர் சூட்ட பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஜூலை 18 ஆம் நாளையும் இந்த அரசு கொண்டாடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கம் கண்ட செம்மொழியின் தாயகமாக, சமத்துவமும், சமூகநீதியும் தழைத்தோங்கி, கல்வியிலும், தொழில்நுட்பத்திலும், திறன்மிகு மனிதவளத்திலும் சிறந்தோங்கும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட இந்நாளில் உறுதியேற்போம்!

தமிழின் இனிமையும், தமிழரின் உயரிய பண்பாடும், மனிதநேய மரபும் தலைமுறைகள் கடந்தும் தழைத்தோங்கட்டும். தமிழ்நாடு உருவாக உழைத்திட்ட தியாக சீலர்களை இந்நாளில் நினைவுகூர்ந்து வணங்கிடுவோம்!” என்று தெரிவித்துள்ளார்.





## பழநி கோயில் நில மோசடி: விற்றவர், வாங்கியோர் வீடுகளில் சிபிசிஐடி போலீஸார் சோதனை

திண்டுக்கல்: ஜூலை.19-

பழநியில் ரூ.100 கோடி மதிப்புள்ள நில மோசடி தொடர்பாக சார் பதிவாளர், நிலத்தை விற்றவர், வாங்கியோர் மற்றும் சாட்சி கையெழுத்திட்டவர்களின் வீடுகளில் சிபிசிஐடி போலீஸார் அதிகாலை 4 மணி முதல் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி மலை அடிவாரத்தில் பூங்கா சாலையில் தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான 1.40 ஏக்கர் நிலம் உள்ளது. ரூ.100 கோடி மதிப்பிலான இந்த நிலம் கடந்த ஜூலை 6ம் தேதி ரூ.2 கோடிக்கு சட்டவிரோதமாக இரு தனிநபர்களுக்கு பத்திரப் பதிவு செய்யப்பட்டது. முறைகேடாக பதிவு செய்து கொடுத்ததாக சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், மாவட்ட பதிவாளர் சசிகலா ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக பத்திரப் பதிவு செய்யப்பட்டதாக பழநி கோயில் இணை ஆணையர் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்ட நிலையில், பத்திரப் பதிவை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இந்த வழக்கு விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, சிபிசிஐடி டிஎஸ்பி அஜய் தங்கம் தலைமையிலான போலீஸார் கடந்த 2 நாட்களாக பழநி தேவஸ்தான அலுவலகம், பத்திரப் பதிவு அலுவலகத்தில் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், (ஜூலை 18) அதிகாலை 4 மணி முதல் திண்டுக்கல்லில் உள்ள சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் வீடு, நிலத்தை விற்றவர், வாங்கியவர்களில் ஒருவரான பழநி டி.கே.என்.புதூரைச் சேர்ந்த சேதுபதி வீடு, அவரது உறவினர்கள், சாட்சி கையெழுத்திட்டவர்களின் வீடுகள் மற்றும் ஒட்டன்சத்திரத்தில் உள்ள பத்திர எழுத்தர், நிலத்தரகர் உட்பட 10க்கும் மேற்பட்டோரின் வீடுகளில் சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் சந்தானலட்சுமி தலைமையில் சிபிசிஐடி போலீஸார், 3 குழுக்களாக பிரிந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

பத்திரப் பதிவு மோசடி வழக்கு தொடர்பாக சிபிசிஐடி போலீஸார் சோதனை நடத்தி வருவது திண்டுக்கல் மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## “தவெக எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கும் முயற்சி தற்போதும் நடக்கிறது” : அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை: ஜூலை.19-

தவெக எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கும் முயற்சிகள் தற்போதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்றும், சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வெற்றி பெறுவதன் மூலம் இந்த அரசை கவிழ்த்துவிடலாம் என திமுக கருதுகிறது என்றும் அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “மின்வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது தெரிந்த பிறகுதான் அவர்களை நிரந்தரப்படுத்துவது குறித்து ஒரு முடிவுக்கு வர முடியும். டிஎன்பிஎஸ்சி வழியாகத்தான் அரசுப் பணியாளர்களை நியமிக்க முடியும். இது தொடர்பாக பல்வேறு நீதிமன்ற உத்தரவுகள் உள்ளன. எனவே, சட்டப்படித்தான் அரசு செயல்பட முடியும்.

பழநி முருகன் கோயிலுக்குச் சொந்தமான நிலம் மோசடியாக பத்திரப் பதிவு செய்யப்பட்ட விவகாரத்தில் விரிவான விசாரணை தேவை. இந்த விசாரணை விரிவடைய வேண்டும். இதில், பலர் சம்பந்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக நாங்கள்



கருதுகிறோம். பழநியில் மட்டுமல்ல பல இடங்களில் போலி பத்திரப் பதிவு சம்பவங்கள் கடந்த 5 ஆண்டுகளாக நடந்துள்ளதாக நாங்கள் சந்தேகப்படுகிறோம். எனவே, இது தொடர்பான விசாரணை விரிவடைய வேண்டும். குற்றமிழைத்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும். கோயில் இடங்கள், நீர்நிலைகள் உள்ள இடங்களில் போலிப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏராளமான புகார்கள் வந்துள்ளன. எனவே, இவை அனைத்தும் துரிதமாக விசாரிக்கப்பட வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பத்திரப் பதிவு மோசடி தொடர்பாக ஒரு வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை. தவெக அரசு வந்த பிறகுதான் இதில் நடந்துள்ள மோசடிகள் குறித்து விரிவாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழநி நில மோசடி தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆட்சியில் இதுபோன்ற நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

பழநி கோயில் நில போலிப் பத்திரப் பதிவு மிகவும் நுணுக்கமாக நடைபெற்று வருகிறது. இதுபோல் வேறு எங்கேனும் போலி பத்திரப் பதிவு நடைபெற்று இருந்தால் பொதுமக்கள் அதனை அரசின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். அரசு விரிவான விசாரணையை நடத்தும்.

எங்கள் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கும் முயற்சியை திமுக தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ரூ.40 கோடி, ரூ. 50 கோடி கொடுத்து எங்கள் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்க அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த முயற்சி தொடர்பாக ரூ.2 கோடி ரூபாய்க்கும் மேலாக ரொக்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

எங்கள் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்க திமுக மற்றும் செந்தில் பாலாஜி சார்பாக கொடுக்கப்பட்ட பணம் ஆங்காங்கே பதுக்கிவைக்கப்பட்டுள்ளது. அந்த பணத்தை கைப்பற்றும் நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். நிறைய இடங்களில் இவ்வாறு பணத்தை அவர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள். இன்றளவும் அந்த முயற்சிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த முயற்சியை ஸ்டாலின் கைவிட வேண்டும்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். அதில் வெற்றி பெறுவதன் மூலம், இந்த அரசை பதவி நீக்கம் செய்ய அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

திருச்சி சிவா எப்போது வேண்டுமானாலும் மத்திய அமைச்சராகலாம் என்று அனிதா ராதாகிருஷ்ணன் கூறி இருப்பதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. எங்களுக்குப் பின்னால் பாஜக இருக்கிறது, நாங்கள் அசைக்க முடியாத சக்தி என்று அவர் சொல்ல வருகிறாரா என்ற கேள்வி எழுகிறது” என்று நிர்மல் குமார் தெரிவித்தார்.

## ‘குத்தாலம் பயலுக கொடூரமா’ அரசு பேருந்துகளின் டிஜிட்டல் பெயர் பலகைகளில் குளறுபடி

மயிலாடுதுறை: ஜூலை.19-

மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, பொறையாறு ஆகிய 3 இடங்களில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகள் இயங்கி வருகின்றன. இங்கிருந்து 100க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், பேருந்துகளில் உள்ள டிஜிட்டல் பெயர் பலகைகளில் அடிக்கடி குளறுபடிகள் நடப்பதால், பயணிகள் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு மயிலாடுதுறை அணைக்கரை நகர பேருந்தில் டிஜிட்டல் பெயர் பலகையில் ‘குத்தாலம் பயலுக கொடூரமா’ என்ற வாசகம் ஆங்கிலத்தில்




ஓடிக்கொண்டிருந்ததை இளைஞர்கள் பலர் வீடியோ எடுத்து, சமூக வலைதளங்களில் பரப்பி வருகின்றனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலர் ரவிக்குமார் கூறியது: கிராமப்புற பகுதிகளுக்கு செல்லும் நகர பேருந்துகளில் ஊர் பெயர்களில் குளறுபடிகள் நடப்பதால், பாரம மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாக வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அரசு பேருந்துகளில் டிஜிட்டல் பெயர் பலகையில் பேருந்து சென்றுவரும் ஊர்களின் பெயர்கள் சரியாக இருக்கிறதா என்பதை நடத்துநர், ஓட்டுநர்கள் அவ்வப்போது கண்காணிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதுகுறித்து அரசு போக்குவரத்துக் கழக அதிகாரிகளிடம் கேட்டபோது, “தொழில்நட்ப கோளாறு காரணமாக இதுபோன்று ஏதாவது பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். அதை அறிந்து உடனுக்குடன் சரிசெய்து வருகிறோம்” என தெரிவித்தனர்.

## வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது இந்தியாவின் முதல் தனியார் ஆர்பிட்டல் ராக்கெட் ‘விக்ரம்1’


சென்னை: ஜூலை.19-

இந்திய விண்வெளி வரலாற்றில் புதிய மைல்கல்லாக, உள்நாட்டு தனியார் நிறுவனத்தால் முழுமையாக வடிவமைக்கப்பட்ட முதல் ஆர்பிட்டல் வகை ராக்கெட்டான ‘விக்ரம்1’ (ஜூலை 18) வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து இன்று இந்த வரலாற்று சிறப்புமிக்க முயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இன்று காலை 11.30 மணிக்கு விக்ரம்1 ராக்கெட் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டிருந்த நிலையில், மேகமூட்டம் சார்ந்த வானிலை காரணமாக 35 நிமிடம் தாமதமாக பகல் 12.05க்கு விண்ணில் ஏவப்பட்டது.

ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய விண்வெளித்துறையின் மிழிஷிறிகிசிமீ அமைப்பின் தலைவர் பவன் கே கோயங்கா, “இந்தியாவின் தனியார் துறை சார்ந்த முதல் ஏவுதல் முயற்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது என்பதை முறைப்படி அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். விக்ரம்1 ராக்கெட்




453 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது எதிர்பார்ப்புகளையும் தாண்டிய ஒரு சாதனை” என தெரிவித்துள்ளார்.

ராக்கெட் ஏவப்படுவதை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் நேரில் பார்வையிட்டார். ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து அவர், இந்த திட்டத்தில் தொடர்புடைய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமான ‘ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்’ தயாரித்துள்ள இந்த ராக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாகவே பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் தனது எக்ஸ் பதிவில், “இந்திய விண்வெளிப் பயணத்தில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய மைல்கல். இன்று காலை 11.30 மணிக்கு ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம், இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டான விக்ரம்1 ஐ வெற்றிகரமாக ஏவும்.

விரைவான மற்றும் தேவைக்கேற்ப ஏவுதல் சேவைகளை வழங்கும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நமது இளைஞர்களின் திறமை, உறுதி, தொழில்முனைவு மனப்பான்மை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

மேலும், நமது விண்வெளித்துறை சீர்திருத்தங்கள், புத்தாக்கம், தொழில்முனைவுக்கான புதிய வாய்ப்புகள் ஆகியவற்றை எவ்வாறு உருவாக்குகின்றன என்பதையும் இது காட்டுகிறது.

இந்த வெற்றிகரமான ஏவுதலுக்காக ஸ்கைரூட் ஏராஸ்பேஸ் குழுவினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள். விக்ரம்1 வானில் உயர்ந்து, சரித்திரம் படைத்து, ஒரு தலைமுறை புத்தாக்கவாதிகளுக்கு உத்வேகம் அளிக்கட்டும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் வெற்றியை அடுத்து, #IndiaWithVikram1 என்ற ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி ஸ்கைரூட் குழுவின் வெற்றிக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்குமாறு அனைத்து இந்தியர்களையும் குறிப்பாக எனது இளம் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

‘மிஷன் ஆகமன்:

‘ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்’ என்ற தனியார் நிறுவனம் தயாரித்துள்ள இந்த ராக்கெட்டின் பயணத்துக்கு ‘மிஷன் ஆகமன்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவை சேர்ந்த தனியார் நிறுவனம், தான் சொந்தமாக உருவாக்கிய ஏவுதளத்தை பயன்படுத்தி செயற்கைக்கோளை விண்வெளி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த முயற்சிப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த பயணத்தின் நோக்கம் ஒர் செயற்கைக்கோளை மட்டும் விண்ணில் செலுத்துவது அல்ல. மாறாக, ராக்கெட்டின் அனைத்து நிலைகளும் விண்வெளி பயணத்தின் போது எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நேரடியாக மதிப்பீடு செய்து தரவுகளை சேகரிப்பதே இந்த சோதனையின் பிரதான இலக்காகும்.

350 கிலோ வரை எடை கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான செயற்கைக்கோள்களை 450 கிமீ தூரத்தில் பூமியின் தாழ்வான சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது.



## ஊட்டு வாழ் மடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் முறைகேடு செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி போராட்டம்

கன்னியாகுமரி, ஜூலை.19-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயில் அருகே ஊட்டுவாள் மடம் பகுதியில் 1960 ஆம் ஆண்டு அப்பகுதி விவசாயிகளின் முயற்சியால் துவங்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் முறைகேடு நடந்திருப்பது கூட்டுறவு துறையால் கண்டுபிடிக்கப்பட்டது முறைகேட்டில் ஈடுபட்டவர்களில் ஒருவரான அங்கு பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர் பூதலிங்கத்தின் சொத்து தற்போது வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது ஆனால் பூதலிங்கம் தவிர ஏனைய நபர்களும் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ள நிலையில் அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காவல்துறை இந்த மோசடி தொடர்பாக வழக்கு பதிவு செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது மோசடியின் பெயரில் கூட்டுறவு சங்கத்தை மூடும் கூட்டுறவு துறையின் முடிவை கைவிட வேண்டும் எனவும் இந்த கூட்டுறவு சங்கத்தின் கீழ் உள்ள நியாய விலை கடைகளை மற்றொரு சங்கத்தின் கீழ் இணைப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.





## மேரி இமாகுலேட் பள்ளியில் மாணவர் பொறுப்பாளர்கள் பதவியேற்பு விழா

மதுரை, ஜூலை.19-

மதுரை கூடல்நகர் பகுதியில் உள்ள மேரி இமாகுலேட் பள்ளியில் 2026ஸ்ரீ2027 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் தலைவர்கள் மற்றும் பல்வேறு குழுக்களின் பொறுப்பாளர்கள் பதவியேற்பு விழா நடைபெற்றது.விழாவில் சாகசக்காரர் குழு, ஆய்வு செய்பவர் குழு, கண்டுபிடிப்பாளர் குழு உள்ளிட்ட மாணவர் குழுக்களின் பொறுப்பாளர்கள், மாணவர் தலைவர் மற்றும் தலைவி ஆகியோர் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.சிறப்பு விருந்தினர்களாக மதுரை தெற்கு மற்றும் தல்லாகுளம் போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் தங்கமணி, பூரண கிருஷ்ணன்



ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து மாணவ, மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.நிகழ்ச்சியில் பள்ளித் தாளாளர் ரோஸ்லின், முதல்வர் அமுதா, துணை முதல்வர் அனிதா, ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். புதிதாகப் பதவியேற்ற மாணவர் தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்களை வாழ்த்தும் வகையில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



■ கிருஷ்ணகிரி: தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் சங்கத்தின் கூட்டமைப்பு சார்பில், உழவர் அலுவலர் தொடர்புத்திட்டம் 2.0ஐ ரத்து செய்ய வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.திட்டத்தால் தொழில்நுட்ப ஆலோசனையில் குழப்பம் ஏற்பட்டு விவசாயிகளும், களப்பணியாளர்களும் பாதிக்கப்படுவதாகவும், அதிகப்படியான பணிச்சுமை காரணமாக திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

## முதலமைச்சர் சி. ஜோஸப் விஜய் பிறந்தநாள் விழாகல்லலில் 500க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள்மேனகா யோகேஷ் ஏற்பாட்டில் எம்.எல்.ஏ. குழந்தைராணி நாச்சியார், எஸ். முத்துபாரதி பங்கேற்பு

சிவகங்கை, ஜூலை.19-

தமிழ்நாடு முதலமைச்சர் ச..ஜோஸப் விஜயின் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் கல்லல் தென்மேற்கு ஒன்றியத்தில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. கல்லல் தவெக நிர்வாகி மேனகா யோகேஷ் தனது சொந்த நிதியில் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில், 500 க்கும் மேற்பட்டோருக்கு அரிசி, அறுசுவை அசைவ உணவு உள்ளிட்டவை வழங்கப்பட்டன. மேலும் மா, பலா, கொய்யா,



நெல்லி உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகளும், பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் மற்றும் கல்வி ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டன.விழாவில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார், சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக செயலாளர் எஸ். முத்துபாரதி ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். கல்லல் தென்மேற்கு ஒன்றியச் செயலாளர் அலெக்ஸாண்டர், மாவட்ட இணைச் செயலாளர் காளையார் கோவில் காளீஸ்வரன், கட்டத்தேவன் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லல் தென்கிழக்கு ஒன்றியச் செயலாளர் கணேசன், மாவட்ட தொண்டரணி சஞ்சய், காளையார்கோவில் ஒன்றியச் செயலாளர் மதன், இணைச் செயலாளர்கள் பாரிகணேஷ், ஆல்பர்ட், ஒன்றிய பொருளாளர் சந்திரன், மகளிரணி அமைப்பாளர் சுபாஷினி, கல்லல் தமிழரசி, மூத்த முன்னோடி கே.ஆர். பால்பாண்டியன், வழக்கறிஞர் விஜய், செம்பனூர் சித்ராதேவி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லல் தவெக நிர்வாகி மேனகா யோகேஷ் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.




■ சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை பேருந்து நிலையத்தில் இருந்து பள்ளி மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக, புதிய வழித்தடமான தேவகோட்டை புதுவயல் பேருந்து சேவையை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே.பிரபு நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி மண்டல பொது மேலாளர் துணை மேலாளர் (வணிகம்) உதவி மேலாளர் (இயக்கம்), கிராம பொது மக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



## நகராட்சிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி, ஜூலை.19-

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்ட பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் .ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.அதன் ஒருபகுதியாக கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் .ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆகியோர் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் கட்டப்பட்டு வரும் பொதுக் கழிப்பிடம், சுற்றுலாத்துறை மேம்பாட்டு நிதியில் அமைக்கப்பட்டுவரும் பணிகள், பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள், கடற்கரை அழகுப்படுத்தும் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.கன்னியாகுமரி திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதிகளை நேரில் பார்வையிட்டு அங்கு சுற்றுலா பயணிகளின் வருகை குறித்தும் அவர்களின் பாதுகாப்பு குறித்தும், சுற்றுலா தளங்களை மேம்படுத்துவது குறித்தும், சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பூங்காவினை மேம்படுத்துவது குறித்தும், கழிப்பறை, குடிநீர் வசதி, குழியலறை உள்ளிட்டவை சுத்த மாகவும், சுகாதாரத்துடன் உள்ளதா எனவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் சுற்றுலா பயணி களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடிய ாக செய்து முடித்திட பொறியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது.மேலும் அய்யன் திருவள்ளுவர் அவர்களை சுற்றுலா பயணிகள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வளைவுவினையும் அவ்வழியாக படகு சவாரிக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் சிரமமின்றி செல்வதற்கும் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பது குறித்தும், பல்நோக்கு வாகன நிறுத்துமிடம் அமைப்பது குறித்தும் துறை சார்ந்த அலுவல ர்களுக்கு அறிவுறுத்தினார்.அதனைத்தொடர்ந்து அஞ்சுகிராமம் மற்றும் கோவளம் பகுதிகளையும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.நடைபெற்ற ஆய்வுகளில் நகராட்சி மண்டல இயக்குநர் நகைந்திரன், கன்னியாகுமரி நகராட்சி தலைவர்.குமரி ஸ்டீபன், நகராட்சி ஆணையர் .பட்டுசாமி, ஆகியோர் கலந்து கொண்டார்கள்,



## நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது

நீலகிரி, ஜூலை.19-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.வாரந்தோறும் விவசாய சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப தகவல்களை விவசாய Whatsapp குழுவில் பதிவிடுமாறு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலை ஃஷயத்திற்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்பட்டது. தேயிலை பறிக்கும் இயந்திரம் குழு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு மட்டும் இல்லாமல் பொது விவசாயிகளுக்கும் மானியம் பெறுவதற்கும் கருத்துரு அனுப்புமாறு தேயிலை வாரியத்திற்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்பட்டது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் உரங்களை விவசாயிகளுக்கு நேரடியாக விற்பனை செய்ய நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்பட்டது. முன்னதாக, 2026 ஆம் வருடம் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுய கணக்கெடுப்பு படி ஆய்வு பற்றி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.இக்கூட்டத்தில் தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மரகதமணி, துணை இயக்குநர் விஜயலட்சுமி உட்பட விவசாயிகள் பலர் உள்ளனர்.

## குன்னூர் ரயில் நிலையம் க.சாந்தி லால் கட்டுமான பொறியாளர் மற்றும் ஒப்பந்ததாரர்கலால், அம்ரித் பாரத் திட்டத்தில் சுமார் 12.18 கோடியில் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு பாரத பிரதமர் நரேந்திர மோடி காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது

நீலகிரி, ஜூலை.19-

அம்ரித் பாரத் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட 75 ரயில் நிலையங்களை பாரத பிரதமர் திறந்து வைத்தார். இதன் ஒரு பகுதியாக

குன்னூர் ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்களான உதகை சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன் மற்றும் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி, குன்னூர் நகரமன்ற தலைவர் சுசிலா மற்றும்

சேலம் கோட்ட ரயில்வே அதிகாரிகள்பங்கேற்றனர். நாடு முழுவதும் அம்ரித்




பாரத் திட்டத்தின் கீழ் 75 ரயில் நிலையங்கள் மேம்பட்ட வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்து.இந்த ரயில் நிலையங்களை பாரத பிரதமர் நரேந்திர மோடி பஞ்சாப் மாநிலத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். தமிழகத்தில் 9 ரயில் நிலையங்கள் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள நிலையில் தற்போது சென்னை பார்க் ஸ்டேஷன் சின்னசேலம் குன்னூர் காணொளி காட்சி மூலம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.இதில் குன்னூர் ரயில் நிலையம் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 12.18 கோடி ரூபாய் செலவில் க.சாந்தி லால் கட்டுமான ஒப்பந்ததாரராலால் பழமை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இங்கு சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது, இந்த நிகழ்ச்சியில் பாரம்பரிய பழங்குடியினர் நடனம், பரதநாட்டியம்,தேச பக்தி பாடல்கள் மற்றும் குன்னூர் வட்டார பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற, உறுப்பினர்கள் சேலம் கோட்ட ரயில்வே உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## குறுவட்ட போட்டியில் சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவிகள் முதல் இடம் பிடித்து வெற்றி

பெரியகுளம், ஜூலை.19-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள பாரத் நிகேதன் பொறியியல் கல்லூரியில் அரசு பள்ளி மாணவிகளுக்கு பெரியகுளம் ஒன்றிய அளவிலான குறுவட்ட போட்டிகள் கடந்த 1 வாரமாக நடைபெற்றது. இதில் கபாடி, குண்டு எறிதல், வாலிபால் உள்ளிட்ட போட்டிகள் நடந்தன. இந்த போட்டிகளில் பெரியகுளம் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து 30க்கும் மேற்பட்ட அரசு பள்ளி மாணவிகள் பங்கேற்றனர். கபாடி போட்டியில் சில்வார்பட்டி அரசு மாதிரி மேல் நிலைப்பள்ளி மாணவிகள் 17 வயதுக்குட்பட்ட மாணவிகள் பிரிவில் முதல் இடத்தையும், 14வயதுக்குட்ட மாணவிகள் பிரிவில் முதல் இடத்தையும் பிடித்து வெற்றி பெற்றனர். மேலும் வெற்றி பெற்ற மாணவிகள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் நேற்று பள்ளி வளாகத்தில் கபாடி போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் ஜமின்தார் ஆகியோரை தலைமை ஆசிரியர் பாண்டி, மற்றும் ஆசிரியர் பெருமக்கள் பாராட்டி வாழ்த்தினர். வைகை அணை அரசு மேல்நிலைப்பள்ளி சார்பில் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் சிலம்பம், சதுரங்க போட்டிகள் கடந்த வாரம் 3 நாட்களாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேனி மாவட்டம்சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.3.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு

சின்னமனூர், ஜூலை.19-

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், காமாட்சிபுரம் ஊராட்சி, சுக்காங்கால்பட்டி கிராமத்தில் முல்லைப் பெரியாற்றிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இப்பகுதிக்கு குடிநீர் கொண்டு செல்ல ரூ. 1 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் இணைக்கும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டதுடன், குடிநீர் குழாயின் தரத்தன்மை குறித்து



ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து வேப்பம்பட்டி ஊராட்சியில், ரூ. 3 இலட்சத்து 38,000 மதிப்பீட்டில் நீர்த்தேக்கத் தொட்டி சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, அப்பகுதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி அலுவலகக் கட்டிடத்தின் தரத்தன்மை குறித்து ஆய்வு செய்தார். மேலும் இப்பகுதியில் வேப்பம்பட்டி காளியம்மன் கோவில் முதல் ரங்கசாமி தோட்டம் வரை ரூ. 99 இலட்சத்து 50,000 மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு, அரசு வழிகாட்டுதலின்படி குறிப்பிட்ட விகிதாச்சார அளவில் ஜல்லி, தார் போன்ற பொருட்கள் சேர்க்கப்பட்டு சாலை அமைக்கப்பட்டுள்ளதா என பார்வையிட்டு, அலுவலர்களிடம் அதன் தன்மை குறித்துக் கேட்டறிந்தார். பின்னர் அழகாபுரி ஊராட்சி கரிச்சிப்பட்டி கிராமத்தில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு பணிகளை உரிய காலத்திற்குள் முடித்திட அலுவலருக்கு அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து, அழகாபுரி ஊராட்சியில் ரூ.31 இலட்சத்து 40,000 மதிப்பீட்டில் ஊராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். முன்னதாக, அழகாபுரி ஊராட்சி அப்பிப்பட்டி கிராமத்தில் நியாயவிலைக் கடைக்குச் சென்றுப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து பார்வையிட்டு, அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்களுக்கு தடையின்றி வழங்க பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வில் சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆண்டாள், முருகேஸ்வரி, உதவிப்பொறியாளர் உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## மொண்டியம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழா பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூலை.19-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மொண்டியம்மன் கோயில் 63ம் ஆண்டு ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு மொண்டியம்மன் நற்பணி மன்றம் சார்பில் 5ம்ஆண்டு சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சிஆலய அன்னதான திடலில் வெகு சிறப்பாக நடை பெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் என்னும் சமபந்தி விருந்து வழங்கப்பட்டது.இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், மொண்டியம்மன் நற்பணி மன்றத்தின் நிர்வா கிகள் மற்றும் கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.




## செங்குன்றத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கல்

மாதவரம், ஜூலை.19-

செங்குன்றத்தில் மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் காமராஜரின் 124 வது பிறந்த நாளைமுன்னிட்டு சென்னை செங்குன்றம் சுற்றுவட்டார நாடார்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் சங்க தலைவர் அகிலன் நாடார் தலைமையி ல் செங்குன்றம் பஜார் அருகே உள்ள காமராஜரின் முழு திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.பின்னர் சங்க துணைத்தலைவர்கள் லிங்கம், ஜெயராஜ் ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் பொருலாளர் சர்வேஸ்வரன், செயற்குழு உறுப்பினர்கள் கண்ணன், அப்பாதுரை, செந்தில்குமார், மற்றும் செல்வசிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.19-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.






## பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகரில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

மாதவரம், ஜூலை.19-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகர் ஆலமரம் அருகே தமிழ்நாடு முதல்வர் ச.ஜோசப்விஜய் பிறந்த நாளை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் மகளிர் அணி அலுவலகம் திறப்பு விழா மற்றும் பொதுமக்களுக்கு அரிசி, புத்தாடை உட்பட அறுசுவை அன்னதானம் வழங்கும் விழா மகளிரணி மாவட்ட அமைப்பாளர் ஷாலினி மகேஷ் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட பொருலாளர் மனோஜ் முன்னிலை வகித்தார். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளருமான. எம்.எல்.விஜய்பிரபு தலைமை தாங்கி திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பின்னர் குத்துவிளக்கு ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு அரிசி, புத்தாடை மற்றும் இனிப்புடன் அறுசுவை அன்னதானத்தை வழங்கினார். இதில் ஊராட்சி செயலாளர் சுரேஷ் மற்றும் வினோத், சதீஷ் உள்ளிட்ட தவெக ஒன்றிய செயலாளர்கள், மகளிர்அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## செங்குன்றத்தில் போதை வேண்டாம் விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.19-

செங்குன்றத்தில் ஆவடி காவல் ஆணையரகம் மற்றும் சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் சார்பில் போதை வேண்டாம் விழிப்பு ணர்வு பேரணி செங்குன்றம் மார்க்கெட் காமராஜர் சிலையிலிருந்து செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் வழியாக கூட்டுச்சாலை நேதாஜி சிலை வரை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆவடி காவல் ஆணையரக இணை ஆணையாளர் மருத்துவர் சிவக்குமார் தலைமையேற்று கொடியசைத்து விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து போதையில்லா தமிழகத்தை உருவாக்கும் உறுதிமொழி அனைவரும் ஏற்றனர். செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் பிராங்க்டி ரூபன், மீஞ்சூர் காவல் ஆய்வாளர் ஆறுமுகம், செங்குன்றம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் சந்திரமௌலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் முகம்மது அபுபக்கர், இயற்கை பாதுகாப்புக் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் மாரியப்பன், மாநில அமைப்பாளர் காஜா, தமிழ்சிங்கம் லயன்ஸ் சங்கச் செயலாளர் சேகர் ஆகியோர் இணைந்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தனர்.மேலும் பேரணியில் பங்கேற்ற மாணவ மாணவிகள் போதைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திருப்பத்தூர் புறவழிச்சாலை பணிகள் மற்றும் தர்மபுரி நான்கு வழி சாலை அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (16.07.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் முரளி, உதவி கோட்டப்பொறியாளர்கள் வெங்கடராமன், அண்ணாமலை, உதவிப்பொறியாளர்கள் கேசவன், பாபுராஜ், சாலை ஆய்வாளர்கள், உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்



■ கிருஷ்ணகிரி: 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பை முன்னிட்டு, பொதுமக்கள் தங்களது குடும்ப விவரங்களை இணையதளம் மூலம் பதிவு செய்யும் சுயக் கணக்கெடுப்பு வசதி தொடங்கப்பட்டுள்ளது.இதையடுத்து, கிருஷ்ணகிரி எம்.எல்.ஏ. பா.முகுந்தனுக்கு அதிகாரிகள் மொபைல் மூலம் தகவல் பதிவு செய்யும் முறையை விளக்கினர். சரியான தகவல்களை பதிவு செய்தால் மக்களின் தேவைக்கேற்ப அரசு திட்டங்களை சிறப்பாக வகுக்க முடியும் என்பதால், அனைவரும் சுயக் கணக்கெடுப்பில் பங்கேற்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

# மானாமதுரை அருகே மக்கள் எதிர்ப்பு: டாஸ்மாக் கடை நிரந்தர மூடல்







மானாமதுரை, ஜூலை.19-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே வளநாடு கிராமத்தில் நீண்ட நாட்களாகச் செயல்பட்டு வந்த அரசு மதுபானக் கடை (எண்: 7706), பொதுமக்களின் தொடர் எதிர்ப்பால் நேற்று நிரந்தரமாக மூடப்பட்டது. மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ் சாலையை ஒட்டியுள்ள வளநாடு பகுதியில் இக்கடை செயல்பட்டு வந்தது. நேற்று காலை பணியாளர்கள் கடையைத் திறக்க வந்தபோது, சிவகங்கை சித்தர் உ. முத்துராமலிங்கம் அறக்கட்டளை நிறுவனர் நேதாஜி நாகர் தலைமையில் அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் திரண்டு வந்து கடையை முற்றுகையிட்டனர். கடையைத் திறக்க விடாமல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தாசில்தார் கிருஷ்ணகுமார், காவல்துறையினர் மற்றும் அதிகாரிகள், போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது மக்கள் முன்வைத்த பல்வேறு புகார்களைக் கேட்டறிந்த அதிகாரிகள், உடனடியாகக் கடையை மூட நடவடிக்கை எடுத்தனர். மேலும், இங்கு இனி இந்தக் கடை செயல்படாது என்று உறுதி அளித்தனர்.**போராட்டத்திற்கான காரணங்கள்:**

* **ஆபத்தான அமைவிடம்:** தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 20 மீட்டர் தொலைவிலும், வழிபாட்டுத் தலத்திற்கு அருகிலும், பள்ளி மற்றும் கல்லூரிக்குச் செல்லும் முக்கியப் பாதையிலும் இக்கடை அமைந்திருந்தது.
* **குடும்பப் பொருளாதாரம்:** கூலி வேலைக்குச் சென்று திரும்பும் குடும்பத் தலைவர்கள், சம்பாதிக்கும் பணத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு முன்பே டாஸ்மாக் கடையில் செலவழிப்பதாகப் பெண்கள் குற்றம் சாட்டினர்.
* **சட்டம் ஒழுங்கு சீர்கேடு:** மது அருந்தியவர்கள் சாலையிலேயே நிர்வாணமாகப் படுத்துக்கிடப்பது, போக்குவரத்தை முடக்குவது, முகம் சுளிக்கும் வகையில் நடந்து கொள்வது போன்றவற்றால் இப்பாதையைப் பயன்படுத்தும் பெண்கள் மற்றும் மாணவிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர்.நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அதிகாரிகள் எடுத்த இந்த அதிரடி நடவடிக்கையால் அப்பகுதி மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.











## மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல் குமார் சுவாமி தரிசனம்

சிவகங்கை, ஜூலை.19-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் கட்டிக்குளத்தில் உள்ள மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் கருப்பனேந்தல் மடத்திற்கு தமிழக மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல் குமார் நேற்று வருகை தந்தார். அங்குள்ள தவச் சாலையில் சுவாமி தரிசனம் செய்த அமைச்சருக்கு, கருப்பனேந்தல் மட நிர்வாகம் சார்பில் பிரசாதங்கள் வழங்கி மரியாதை செய்யப்பட்டது.

## மல்லல் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம்: மருத்துவமனையில் விசிக நிர்வாகிகள் ஆறுதல்



சிவகங்கை, ஜூலை.19-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், மல்லல் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வரும் மாணவர் சஞ்சய் பிரசாத், பேருந்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் முன்விரோதம் காரணமாக சக மாணவர்களால் கத்தியால் குத்தப்பட்டதாக கூறப்படுகிறது. பலத்த காயமடைந்த மாணவர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வழக்கறிஞர் வே. பாலையா, வழக்கறிஞர் பா. வெற்றிவிஜயன் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.இச்சம்பவம் தொடர்பாக கொலை முயற்சி மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக விசிக மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வே. பாலையா தெரிவித்துள்ளார்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு (DISHA) தலைவர் /திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை தலைமையில் (17.07.2026) அன்று மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் / உறுப்பினர் செயலர் க.ரவிகுமார்,இ.ஆ.ப., ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பி.சையத் பாரூக் பாஷா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அஷ்யு அனில் வாகரே,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட வன அலுவலர் மகேந்திரன்.இ.வ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் சௌ.தமிழரசி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், உள்ளாட்சி பிரதி

**present sale for all over Tamil Nadu**

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## கல்லலில் ஓவியப்போட்டி



காளையார் கோவில், ஜூலை.19-

ராம்ராக் நினைவுப் பாசறை மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து கல்லல் மற்றும் காளையார் கோவில் ஒன்றியங்களைச் சேர்ந்த பள்ளி மாணவ மாணவிகளுக்கு "வளமான சூழல் நல்வாழ்வு" என்ற தலைப்பில் ஓவியப்போட்டியை கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் நடத்தியது. போட்டியில் பங்கு பெற்ற 300 பேருக்கும் பாராட்டுச் சான்றிதழும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. 62 பேருக்கு ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது. இளநிலைப் பிரிவில் காளையார் கோவில் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா பள்ளியைச் சேர்ந்த சஞ்சனா ஸ்ரீ முதல் இடமும், முனீஸ்வரன் இரண்டாம் இடமும், பாகனேரி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த ஹேமா மூன்றாம் இடமும், கண்டரமாணிக்கம் சேது ஜராணி பள்ளியைச் சேர்ந்த ரிஸ் மியா தஃபீனாஷ் ஆறுதல் பரிசும் பெற்றனர். உயர்நிலைப் பிரிவில் கண்டரமாணிக்கம் சேது ஜராணி பள்ளி மாணவி முதல் இடம், கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி மாணவர் சஞ்சய் குமார் இரண்டாம் இடம், கல்லல் சாந்திராணி மேல்நிலைப்பள்ளி மாணவிகள் ஜஸ்மிதா மற்றும் வர்ஷிகா முறையே மூன்றாம் இடம் மற்றும் ஆறுதல் பரிசு பெற்றனர். ஓவிய ஆசிரியர்கள் வள்ளிக்கண்ணு முத்துப்பாண்டி செந்தில்குமார் தனசேகரன் தெய்வசிகாமணி ஆகியோர் சிறந்த ஓவியங்களைத் தேர்ந்தெடுத்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட தலைவர் ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அழகப்பன் வருவாய் ஆய்வாளர்கள் பாக்கியலட்சுமி சரஸ்வதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். ஆசிரியர் கண்ணதாசன் வாழ்த்துரை வழங்கினார். கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி ஓவிய ஆசிரியர் மாரிமுத்து, ராம்ராக் நினைவுப் பாசறை நிறுவனர் சந்திரமோகன், இணை ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் பிரபு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்ததுடன் போட்டியை ஒருங்கிணைத்தனர்.



## இளையான்குடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி இடத்தை பாதுகாக்க சிபிஎம் கோரிக்கை

இளையான்குடி, ஜூலை.19-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியின் இடம் முழுவதையும் பள்ளியின் பயன்பாட்டிற்கே பாதுகாக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இளையான்குடி தாலுகா குழு கோரிக்கை விடுத்துள்ளது.இப்பள்ளிக்கான இடம் 1986ஆம் ஆண்டு இளையான்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி என்ற பெயரில் வகைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பள்ளியில் மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கல்விப் பணியில் ஈடுபட்டு வரும் நிலையில், பள்ளி வளாகத்தில் தனிநபர்களின் பெயர்களுக்கு பத்திரப்பதிவு மற்றும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை மற்றும் பத்திரப்பதிவுத்துறை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி, முறைகேடாக பத்திரப்பதிவு அல்லது பட்டா மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அவற்றை ரத்து செய்ய வேண்டும். மேலும், பள்ளிக்கூட இடத்தை முழுமையாகப் பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிபிஎம் இளையான்குடி தாலுகா செயலாளர் எஸ். ராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.



## மதகுபட்டி காஸ்மாஸ் லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்புபுதிய தலைவராக கே.எஸ்.எம். ஹனீபா பொறுப்பேற்பு

சிவகங்கை, ஜூலை.19-

சிவகங்கை மாவட்டம் மதகுபட்டி காஸ்மாஸ் லயன்ஸ் சங்கத்தின் 2026ஆம் 2027ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில், சங்கத்தின் புதிய தலைவராக சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக வர்த்தக அணி அமைப்பாளர் கே.எஸ்.எம். ஹனீபா, செயலாளராக ஞானசேகரன், பொருளாளராக அழகப்பன் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். மாவட்ட முன்னாள் ஆளுநர் எஸ்.எஸ். பாரி பரமேஷ்வரன் புதிய நிர்வாகிகளை பதவியில் அமர்த்தினார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அரசு வழக்கறிஞர் ஆதி. அழகர்சாமி, ஓய்வுபெற்ற சார்பு ஆய்வாளர் பாண்டியராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அமைச்சரவை ஆலோசகரும் முன்னாள் அமைச்சரவை செயலாளருமான அமிமா ஜாண் பிரிட்டோ, அமைச்சரவை கூடுதல் செயலாளர் அரிமா சித்தார்தன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் திருமலை ஆறு. முத்துராமலிங்கம், திருமலை மணிமாறன், கோவிலூர் பரணிகிட்டு, அலவே நாகராஜன், காஜா மைதீன் உள்ளிட்ட அரசியல் கட்சி நிர்வாகிகள், லயன்ஸ் சங்க நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.இதையொட்டி ஏழை, எளிய மக்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. விழாவிற்கான ஏற்பாடுகளை மதகுபட்டி காஸ் மாஸ் லயன்ஸ் சங்கத் தலைவர் கே.எஸ்.எம். ஹனீபா தலைமையிலான நிர்வாகிகள் செய்திருந்தனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161